**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.243/2022**

17.07.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.கி.சுதா, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

பிரதிவாதி சாட்சி1 சிவசங்கரன் த/பெ.ஆனந்தன்: வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

என் தந்தை ஆனந்த படையாட்சி என் சகோதரர் ராமானுஜத்திற்கு தான செட்டில்மண்ட் பத்திரம் எழுதி கொடுத்தாரா என்றால் என் தந்தை 4 மகன்களுக்கும் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் வா.சாஆ.12 என் அப்பா என் சகோதரர் ராமானுஜத்திற்கு எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் உள்ள வாசகங்கள் சரியானவை தானா என்றால் படித்து பார்த்தால் தான் தெரியும். அந்த பத்திரத்தில் நானும் ஒரு சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் ஆமாம், என் பத்திரத்தில் என் தம்பி சாட்சி கையொப்பம் போட்டார், அவர் பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டேன். அந்த பத்திரத்தில், ஆனந்தபடையாட்சி குமாரர் ராமானுஜம் படையாட்சி அவர்களுக்கு கீழூர் கிராமத்தில் வசிக்கும் காலம் சென்ற கோதண்டராமன் குமாரர் ஆனந்தபடையாட்சி(1), மேற்படி ஆனந்தபடையாட்சி குமாரர்கள் பாவாடை படையாட்சி (2) சிவசங்கரன் படையாட்சி(3) ரங்கநாதன் படையாட்சி(4) ஆகிய நான்கு பேரும் எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் என்று வாசகம் உள்ளது என்றால் ஆமாம். அந்த பத்திரத்தில் ஆனந்தபடையாட்சி சகோதரர் சாமிக்கண்ணு அவர்கள் பெரியபையன் வகையராவிடமிருந்து கிரையம் பெற்ற பத்திரத்தை 16.10.1942ல் எழுதி பதியப்பட்ட பத்திரப்படி சாமிக்கண்ணு கவுண்டருக்கு சொந்தமானதும் மேற்படி சாமிக்கண்ணு கவுண்டர் திருமணம் ஆகாமல் வாரிசு ஏதும் இன்றி

காலமானபடியால் அவருடைய வாரிசுதாரர்கள் என்ற முறையில் எங்களுக்கு சொந்தமாகி அனுபவத்தில் இருந்து வருவதாக வாசகம் உள்ளது என்றால் சரிதான். 16.10.1942 தேதியில் கிரையம் பெற்ற பத்திரத்தில் கண்ட சொத்து தான் எங்கள் பொதுகுடும்ப மூல ஆதார சொத்து என்றால் மூதாதையர் சொத்து எதுவும் இல்லை, சொத்து எங்கள் அப்பா கிரையம் பெற்ற சொத்து தான். மேற்படி மூலஆதார சொத்து மூலம் கிடைத்த வருமானத்தை கொண்டு தான் என் அப்பா பிற சொத்துக்கள் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் எல்லாம் என் அப்பா சம்பாதித்த சொத்து தான், நாங்கள் அப்போது சிறுபிள்ளைகளாக இருந்தோம்.

அலமேலு என்பவர் என் தங்கை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.13 அலமேலு பெயரில் உள்ள செட்டில்மெண்ட் பத்திரம் என்றால் ஆமாம். அந்த பத்திரத்திலும் ஏற்கனவே குறிப்பிட்ட வாசாஆ.12 தான செட்டில்மெண்ட்டில் கண்டுள்ளவாரே சொத்து குறித்து வாசகம் கண்டுள்ளது என்றால் எல்லா தான செட்டில்மெண்ட் பத்திரங்களிலும் அதே வாசகங்கள் தான் உள்ளது. என் அப்பா அவருடைய மகன்கள் 4 பேருக்கும் மகள்கள் 4 பேருக்கும் தனிதனியாக 8 தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். என் தந்தை அதுபோல தான செட்டில்மெண்ட் பத்திரங்கள் எழுதி வைக்க அதிகாரம் இல்லை என்றும் அதே போல என் தந்தையுடன் சேர்ந்து நானும் மற்ற சகோதரர்களும் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைக்க அதிகாரம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

என் தந்தை எனக்கு எழுதி வைத்த வா.சா.ஆ.1 தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் 2 அயிட்ட நிலங்கள் மட்டுமே கண்டுள்ளது என்றால் ஆமாம். அதில் முதல் அயிட்ட சொத்து விவரத்தில் சர்வே எண்.13/8 தானம்மாள் நிலத்திற்கு தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2வது

அயிட்ட சொத்தான சர்வே எண்.19/2 என்பது ஆனந்தபடையாட்சி நிலத்திற்கு தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் என் சகோதரர்கள் பாவாடை மற்றும் ரங்கநாதன் சாட்சிகள் என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் கண்டுள்ள சொத்திற்கு வடபுறம் அமைந்துள்ள ஆனந்தபடையாட்சி மற்றும் தானம்மாள் சொத்துக்கள் பொதுகுடும்ப சொத்துக்கள் என்றால் பொதுகுடும்பம் என்று இல்லை. வா.சாஆ.1 மற்றும் 2ல் கண்டுள்ள சொத்துக்கள் ஒரே சர்வே எண்ணில் உள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். வாசாஆ.2 பத்திரத்தின் சொத்து விவரத்திலும் ஆனந்த படையாட்சி மற்றும் தானம்மாள் நிலத்திற்கு தெற்கு என்று விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் அம்மா என்ன வேலை செய்தார் என்றால் களை வெட்டி சம்பாதித்து எங்களை காப்பாற்றினார். என் பெற்றோர் மற்றும் என் சகோதர சகோதரிகள் மொத்தம் 10 பேர் அடங்கிய குடும்பத்திற்கு மொத்த சொத்துக்கள் எவ்வளவு இருந்தது என்றால் அது ஞாபகம் இல்லை. என் தந்தை எனக்கு எவ்வளவு பூமி செட்டில்மெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் சுமார் 3/4 காணி(சுமார் 84 சென்ட்) எழுதி கொடுத்தார். அதேபோல என்னுடைய மற்ற சகோதர சகோதரிகளுக்கும் தலா 3/4 காணி நிலம் செட்டில்மெண்ட் பத்திரங்கள் மூலம் எழுதி வைத்தார் என்றால் ஆமாம். என் அப்பா ஆனந்தபடையாட்சியின் தந்தை பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

வா.சாஆ.3 நான் எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரத்தில் சாட்சிகள் யார் என்றால் அது ஞாபகம் இல்லை. வா.சாஆ.3 13.09.2010 தேதியிலும், வாசாஆ.4 கிரையபத்திரம் 24.01.2011 தேதியிலும் எழுதப்பட்டது என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தில் இன்னார் என்று நிரூபித்தவர் என்ற இடத்தில் நான் சாட்சியாக கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் ஆமாம். வா.சாஆ.3 பொது அதிகார பத்திரத்தில் உள்ள சொத்துக்களை பழனி மனை இடங்களாக பிரித்து விற்பனை செய்தார் என்றால் சரிதான். மனை

இடங்களாக பிரித்து பழனி விற்பனை செய்த கிரைய தொகையும் 4வது சான்றாவணமான கிரையபத்திரத்தில் குறிப்பிட்ட கிரைய தொகையும் ஏறக்குறைய சமமான தொகையான உள்ளது என்றால் அது பத்திரத்தை பார்த்தால் தான் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சாஆ.5 வில்லங்க சான்றிதழில் நான் பழனிக்கு எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரமும் அதன் அடிப்படையில் பழனி அந்த சொத்தை மனை இடங்களாக பிரித்து பல நபர்களுக்கு விற்பனை செய்த பத்திரங்களின் விவரங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அவர் எத்தனை நபர்களுக்கு கிரையம் செய்து கொடுத்தார் என்பது எனக்கு தெரியாது. நான் பழனிக்கு கிரையபத்திரம் கொடுக்கவில்லை என்றும் பவர் பத்திரம் மட்டும் தான் எழுதி கொடுத்தேன் என்றும் சொன்னால் ஆமாம். என்னால் செய்யமுடியாத வேலையை பழனி செய்யவேண்டும் என்பதற்காக தான் பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தேன் என்றால் ஆமாம். நான் Jawahar Housing Society யில் அடமானம் வைத்த வீட்டு சொத்து சம்மந்தமாக தான் புதுவை நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். என் மருமகள் பெயர் ராஜேஸ்வரி என்றால் ஆமாம். அடமானம் சம்மந்தமான கடன் பத்திரங்கள் வா.சாஆ.6 மற்றும் 7ல் முறையே என் மகனும், என் மருமகளும் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் ஆமாம்.

நான் பூபதி என்பவரிடம் அடமான கடன் பெற்று அதை பைசல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அது வீட்டுமனை சம்மந்தமாக ஏற்பட்ட கடன் என்றால் ஆமாம். அந்த அடமான கடன் பத்திரத்தில் என் வீட்டிற்கு சக்குபந்தியாக பாவாடை மனைக்கும் ரங்கநாதன் மனைக்கும் வடக்கு என்று கண்டுள்ளது என்றால் ஆமாம். அதுவும் பொதுகுடும்ப சொத்து என்றால் சரியல்ல. நான் பூபதிக்கு எழுதி கொடுத்த அடமான கடன் பத்திரம் வாசாஆ.8ல் அந்த சொத்து எனக்கு 31.01.1992 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் படி

பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். 31.01.1992 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் மேற்படி வீட்டுமனை சம்மந்தமாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

தாவா சொத்துக்கள் கீழூரில் உள்ள பொதுகுடும்ப சொத்துக்களை விற்பனை செய்து அதில் வந்த வருவாயை கொண்டு கொங்கம்பட்டு கிராமத்தில் 3ம் பிரதிவாதி பெயரில் பொதுகுடும்பத்திற்காக வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றும் அதில் வாதிக்கு 4ல் 1பாகம் பங்கு உரிமை உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல, அது என் மகன் தனிபட்ட முறையில் சம்பாதித்து வாங்கிய சொத்து. எனக்கு ஒரு மகன் மற்றும் இரண்டு மகள்கள் என்றால் ஆமாம். என் இரண்டு மகள்களுக்கும் சொத்து கொடுக்ககூடாது என்ற எண்ணத்தில் என் மகன் பெயரில் சொத்து வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. என் மகன் என்னை மிரட்டி இதுபோல சாட்சி சொல்ல வைத்துள்ளார் என்றால் சரியல்ல. வாதிக்கு சொத்து போய்விடக்கூடாது என்ற எண்ணத்தில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.